**DECEMBER 2023** **P/ID 35317/PTL2G**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்கட்கு, முறையே 50 சொற்களில் விடையெழுதுக.

1. நாலடியார் - சொற்பொருள் கூறுக.

2. நாலடியாரைப் பாடியோர் யாவர்?

3. நாலடியாரின் யாப்பு எது?

4. பழமொழி நூலின் ஆசிரியர் யார்?

5. பழமொழி நூலில் எத்தனை பாக்கள் உள்ளன?

6. நான்மணிக்கடிகையின் ஆசிரியர் யார்?

7. இனியவை நாற்பதை இயற்றியவர் எவர்?

8. முக்கண் இறைவன் - யார்?

9. வாரணம் - பொருள் சுட்டுக.

10. ஐயம் இட்டு உண் - பொருள் கூறுக.

11. கௌவை அகற்று என்றால் என்ன?

12. பீடு - சொற்பொருள் சுட்டுக.

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்கட்கு, முறையே 250 சொற்களில் விடையெழுதுக.

13. கொடாதவர் நல்கூர்ந்தவர் என்று நாலடி நவில்வதை விளக்குக.

14. இளங்கன்று தாயை அடையாளம் காண்பதைக் கூறி, நாலடியார் அறிவுறுத்துவது யாது?

15. "மக்கள் கருத்தைப் புலவர் பாவாக்கியது பழமொழி நூல்" - விளக்குக.

16. பொருள் கொடுத்து இருள் கொள்ளார் என்று பழமொழி சுட்டுவது யாது?

17. இன்முகம், இன்சொல் ஆகியவற்றின் தேவையை வலியுறுத்துக.

18. 'கோட்செவிக் குறளை காற்றுடன் நெருப்பு' விளக்குக.

19. 'தையும் மாசியும் வை அகத்து உறங்கு' - விவரிக்க.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்கட்கு, முறையே 500 சொற்களில் விடையெழுதுக.

20. நாலடியாரால் அறியலாகும் நிலையாமைத் தத்துவத்தை விளக்குக.

21. அறிதொறும் அறியாமை அகலும் - ஆராய்க.

22. ஏவா மக்கள் மூவா மருந்து - விளக்குக.

23. அவ்வையாரின் இலக்கியங்கள் சிறுவர்க்கா? அனைவருக்குமா? விவாதிக்க.

24. அறநூல் விழுமியங்கள் மானுட மேன்மைக்கு வாய்ப்பாகுமாற்றை நிறுவுக.

———————